தினமலர்
உண்மையின் உரைகல்

142 கிழங்கு சாகுபடியாளர்களுக்கு மான்யம்: எம்.எல்.ஏ., வழங்கல்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,00:50 IST

வேதாரண்யம்: வேதாரண்யம் அருகே பாதிக்கப்பட்ட 142 கிழங்கு சாகுபடியாளர்களுக்கு அரசு மான்யத்தை எம்.எல்.ஏ., காமராஜ் வழங்கினார். வேதாரண்யம் அடுத்த செம்போடை அரசு மேல்நிலைப்பள்ளியில் அப்பகுதியை சேர்ந்த கார்த்திகை கிழங்கு சாகுபடியாளர்கள் 142 பேருக்கு மானியத்தொகை வழங்கும் விழா பஞ்சாயத்து துணைத்தலைவர் மதியழகன் தலைமையில் நடந்தது. அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் சிவானந்தம், துணைச்செயலாளர் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோட்டக்கலைத்துறை அலுவலர் சிவராமகிருஷ்ணன் வரவேற்றார். இதில் கடந்த 2010-11ம் ஆண்டுகளில் கணக்கெடுக்கப்பட்ட கார்த்திகை கிழங்கு சாகுபடியாளர்கள் 142 பேருக்கு அரசின் மான்யத்தொகையாக 8.67 லட்சம் ரூபாயை வேதாரண்யம் எம்.எல்.ஏ., காமராஜ் வழங்கினார். கார்த்திகை சாகுபடியாளர்கள் சங்க பொறுப்பாளர்கள் மனோகரன், செல்வராசு, யூனியன் கவுன்சிலர் சகுந்தலா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

ஊட்டி கோடை சீசனுக்காக பூங்காவில் சிறப்பு பணிகள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,00:11 IST

ஊட்டி : மலர் கண்காட்சிக்காக ஊட்டி தாவரவியல் பூங்காவில் சிறப்பு அலங்காரங்கள் மேற்கொள்ப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசனுக்காக சுற்றுலா ஸ்தலங்களை பொலிவுப்படுத்தும் பணிகள் துரிதமாக நடக்கின்றன. தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, படகு இல்லம் உட்பட மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலா மையங்களும் பொலிவு படுத்தப்படுகின்றன. ஊட்டி தாவரவியல் பூங்காவில் 250க்கும் மேற்பட்ட ரகங்களுடன், 2.50 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. 15 ஆயிரம் மலர் தொட்டிகளில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மலர் நாற்றுகள் வளர்க்கும் பணி நிறைவு பெற்றுள் ளது; மாத இறுதியில் மலர்கள் மலரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பூங்கா அலுவலகத்தின் முன்பு "சிறிய அலங்கார குன்றை' உருவாக்கும் பணியில் பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

**ராணுவத்துக்கு தேயிலை தூள் கொள்முதல் செய்யுங்கள் : மத்திய அமைச்சரிடம் சிறு விவசாய சங்கம் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,00:11 IST

ஊட்டி : "தென்னிந்திய ஏல மையங்களிலிருந்து ராணுவத்துக்கு தேயிலை தூள் கொள்முதல் செய்ய வேண்டும்,' என சிறு விவசாயிகள் சங்கம் சார்பில் வலியுறுத்தப்பட்டது. மறைந்த பீல்டு மார்ஷல் மானெக்ஷாவின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள ஊட்டி வந்த மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோணிக்கு காங்கிரஸ் சார்பில் மாவட்ட தலைவர் கணேஷ் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது, தேயிலை சிறு விவசாய சங்க தலைவர் சுப்ரமணியம் மத்திய அமைச்சரிடம் அளித்த மனுவில் கூறியுள்ளதாவது: கடந்த காலங்களில் இந்திய ராணுவத்துக்கான தேயிலை தூள் தென்னிந்தியாவிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. தென்னிந்தியாவில் உற்பத்தியாகும் தேயிலையில், நீலகிரி தேயிலைக்கு பெரும் பங்கு உள்ளது. நீலகிரியில் 62 ஆயிரம் சிறு,குறு தேயிலை விவசாயிகள் இதனால் பயனடைந்து வந்தனர். இந்நிலையில், ராணுவத்துக்கு தேவையான தேயிலை தூள் சமீபகாலமாக தனியார் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான சிறு,குறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, ராணுவத்துக்கு கொள்முதல் செய்யப்படும் தேயிலை தூளில் 25 சதவீதம் தென்னிந்திய தேயிலை ஏல மையங்களிலிருந்து கொள்முதல் செய்ய வேண்டும்; தூளின் தரத்தை, தேயிலை வாரியம் அங்கீகரித்துள்ள தனியார் ஆய்வு கூடங்களில் பரிசோதனை செய்ய வேண்டும். இதே கோரிக்கைகளை வலியுறுத்தி, முன்னாள் எம்.பி., பிரபு தலைமையில் சிறு, குறு விவசாயிகள் ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியா காந்தியை ஏற்கனவே சந்தித்து மனு அளித்துள்ளோம். நம் ராணுவத்துக்கான தரமான தேயிலை தூள் கிடைக்கவும், சிறு, குறு தேயிலை விவசாயிகள் வாழ்வாதாரம் சிறப்பாக அமையவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு சுப்ரமணியம் கூறியுள்ளார்.

**தேங்காய் பறிப்பை மதிப்புமிக்க தொழிலாக மாற்றிய வாலிபர்: கார், மொபைல்போன், பிரத்யேக வெப்சைட் என அசத்துகிறார்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 03,2012,23:54 IST

திருவனந்தபுரம்:கேரளாவில் தென்னை மரம் ஏறி, தேங்காய் பறிக்க ஆட்கள் கிடைக்காத நிலையில், இளைஞர் ஒருவர், அதை உயர் தொழில்நுட்ப வேலை போல செய்து வருகிறார். கார், மொபைல்போன் மற்றும் பிரத்யேக வெப்சைட் என, அசத்தி வருகிறார்.

கேரள மாநிலத்தில் தென்னை மரங்கள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. ஆனால், மரத்தின் மீதேறி, தேங்காய் பறித்துப்போட ஆட்கள் கிடைப்பதுதான் குதிரை கொம்பாகி விட்டது.

கவுரவமான வேலை :தேங்காய் பறித்துப் போடுவதை, கேரள இளைஞர்கள் பலர், மதிப்புக் குறைவான வேலையாக நினைக்கும் நேரத்தில், கோட்டயம் மாவட்டம் செங்கணாசேரி பகுதியைச் சேர்ந்த செல்வின் சாக்கோ, 37, என்பவர், அதை கவுரவமான வேலையாக நினைத்து செய்வதோடு, சந்தோஷமாகவும் செய்து வருகிறார். காலமாற்றத்திற்கு ஏற்ப, வாடிக்கையாளர்கள் தன்னை எளிதில் தொடர்பு கொள்ள வசதியாக, மொபைல்போன் மற்றும் வெப்சைட் போன்ற வசதிகளையும் பயன்படுத்தி வருகிறார். மேலும், தேங்காய் பறிக்க எங்கு சென்றாலும், காரில்தான் செல்கிறார். இதனால், தனக்கு நேரம் மிச்சமாகிறது என்றும் கூறுகிறார்.

**இதுதொடர்பாக, செல்வின் சாக்கோ கூறியதாவது:**

**கடனில் சிக்கினேன் :** முதலில் பஸ் கண்டக்டராகப் பணியாற்றினேன். பிறகு இரு பஸ்களை வாங்கி இயக்கினேன். பஸ் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு, கடனில் சிக்கினேன். பல நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு வேலை கேட்டேன். அதிலும் பயனில்லை. இறுதியில் நிலையான வருமானம் தரும் வேலை ஒன்றைச் செய்ய முடிவு செய்தேன். பல தேடுதல்களுக்குப் பிறகு, தேங்காய் பறிப்பு, நல்ல வருமானம் தரும் தொழில் என முடிவு செய்தேன். கோட்டயம் குமரகம் அருகே, "கிரிஷி விஞ்ஞான் கேந்திரா' என்ற அமைப்பு அளித்த, தேங்காய் மரம் ஏறும் பயிற்சியில் பங்கேற்று, மரம் ஏறுவதில் தேர்ச்சி பெற்றேன். தற்போது, எனக்கு தேங்காய் பறிக்க வரும்படி தினமும் 100க்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புகள் வருகின்றன.

**மாதம் ரூ.30 ஆயிரம்:**மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்து தினமும் என்னை ஏராளமானோர் அணுகுகின்றனர். நான் தினமும் 40 முதல் 45 மரங்கள் ஏறி வருகிறேன். இதன் மூலம் மாதம் 30 ஆயிரம் ரூபாய் வருவாய் ஈட்டி வருகிறேன். "சங்காதி கூட்டம்' என்ற பெயரில் வெப்சைட் ஒன்றைத் துவக்கி, அதில், என்னுடைய மொபைல்போன் நம்பர் மற்றும் என்னைப் பற்றிய விவரங்களைக் குறிப்பிட்டுள்ளேன்.

**பெட்ரோல் செலவு :**தேங்காய் பறிப்பதற்கு உரிய கூலியைப் பெற்று விடுவதோடு, மாவட்டத்தை விட்டு வெளியே சென்றால், காரின் பெட்ரோலுக்குரிய செலவையும் சேர்த்து வாங்கி விடுவேன். தேங்காய் பறிப்பு தொழிலில் நான் இறங்கிய போது, என் குடும்பத்தினரும், சமூகத்தினரும் நான் அவர்களை அவமானப்படுத்திவிட்டதாகக் கூச்சலிட்டனர். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றவர்களோ, நான் குறைவான கூலி வாங்குவதாக விமர்சித்தனர். இவ்வாறு செல்வின் சாக்கோ கூறினார்.

**கோடையில் கோழி பராமரிப்பு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,01:06 IST

வடமதுரை : கோடையில் கோழிகளை பராமரிக்கும் வழிமுறைகளை கால்நடைத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

கோழிகளின் உடல் வெப்பம் மற்ற பிராணிகளை விடு சற்று அதிகம். வியர்வை சுரப்பிகள் இல்லாததால், கூடுதல் வெப்பத்தை வெளியேற்ற இயலாது. இதனால் அவைகளை விரட்டி பிடிப்பதால் பலவீனம் அடைகின்றன.

காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை, இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை தண்ணீர் தர வேண்டும்.

வெயில் அதிகமாக இருக்கும் நேரங்களில் கோழிகள் தீவனம் சாப்பிடாது. எனவே முற்பகல் 11 மணிக்கு 2 முறை தீவனம் தர வேண்டும். கால்நடை டாக்டர் பரிந்துரைக்கும் மருந்தை மாலையில் தண்ணீரில் கலந்து தர வேண்டும்.

கால முறையில் கால்நடை மருந்தகங்களில் தடுப்பூசி மருந்து செலுத்த வேண்டும். இந்த வழிமுறைகளை கையாண்டால் வெப்ப நோய்களில் இருந்து கோழிகளை பாதுகாக்கலாம்.

**"குறட்டை' விடும் சிரட்டை விலை : தேங்காய் பருப்பு எடுத்தல் நிறுத்தம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,01:08 IST

வத்திராயிருப்பு : தேங்காய் சிரட்டை விலை டன்னுக்கு ரூ.4000 க்கு மேல் குறைந்ததால், பருப்பு எடுக்கும் பணிகளை வியாபாரிகள் நிறுத்தி உள்ளனர். இதனால் தேங்காய் உரிப்பு, மற்றும் பருப்பு எடுக்கும் தொழிலாளர்கள் வேலையின்றி உள்ளனர். வடமாநிலங்களுக்கான தேங்காய் ஏற்றுமதி ,கடந்த மூன்று மாதமாக குறைந்ததால், தேங்காய் விலை சரிவை சந்தித்துள்ளது. இந்நிலையில், தேங்காய் உடைத்து பருப்பு எடுத்து, கொப்பரை தேங்காய்களாக காங்கேயம், வெள்ளக்கோவில், புதுச்சேரி எண்ணெய் மில்களுக்கு வியாபாரிகள் அனுப்பினர். ஒரு தேங்காயை உரித்து, உடைத்து பருப்பு எடுக்க வியாபாரிகளுக்கு 15 பைசா செலவாகிறது. அதன் சிரட்டையை விலைக்கு போடுவதன் மூலம், இதன் செலவை ஈடுகட்டினர். இந்த சிரட்டை கரியாக்கப்பட்டு, பேட்டரி கட்டைகள் உட்பட பல்வேறு பொருட்களுக்கு கரிமப்பொருட்களாக பயன் படுத்தப் படுகின்றன. இவற்றை கொள்முதல் செய்யும் கம்பெனிகளில், ஒரு டன் சிரட்டை ரூ. 8500 க்கு விற்பனை செய்தனர். கடந்த இருமாதமாக மின்தடையால், இதன்தொழிற்சாலைகளும் முடங்கியதால், ஏற்கனவே கொள்முதல் செய்த சிரட்டைகள் தேங்கி உள்ளன. இதனால் புதிதாக சிரட்டைகளை கொள்முதல் செய்வதை ஆலைகளும் நிறுத்தின. இதனால் சிரட்டை விலையானது , இரு மாதத்தில் டன்னுக்கு ரூ. 4 000 குறைந்தது. வியாபாரிகளும் பருப்பு எடுக்கும் பணிகளை பெருமளவு குறைத்துவிட்டனர். இதனால் தேங்காய் உரிப்பு, பருப்பு எடுக்கும் தொழிலாளர்களுக்கு சரிவர வேலை இல்லை.

இது தொடர்பாக தொழிலாளர்கள் ஆதங்கம்:
மாடசாமி (ராமசாமியாபுரம்): தேங்காய் உரிப்பு பணிகளை வியாபாரிகள் நிறுத்தியதால், எங்களுக்கு சரிவர வேலை இல்லை. ஒரு தொழிலாளி ஆயிரம் காய்களை உரித்து வந்த நிலை மாறி, தற்போது ஆயிரம் காய்களை உரிக்க 5 பேர் போட்டிபோடவேண்டியுள்ளது.
ஆ.குமார் (கூமாப்பட்டி): காய்களை உடைத்து பருப்பு எடுக்க பெரும்பாலும்பெண்களே பணியமர்த்தப்படுவர். தற்போது வேலை இல்லாததால், பெண்கள் பார்க்க வேண்டிய வேலைகளை நாங்கள் பார்க்கிறோம்.
வைரவன்(ராமசாமியாபுரம்): தேங்காய் மார்க்கெட் இறங்குமுகமாக உள்ளதால், வேறு வேலைகளைத்தான் தேடவேண்டியுள்ளது. இப்படியே போனால், தென்னை விவசாயத்தை விவசாயிகள் புறக்கணித்துவிடுவர்.
ந.குமார்(ராமசாமியாபுரம்): இதன் பிரச்னைகளுக்கு, அரசு சார்பில் கொப்பரை தேங்காய்

கொள்முதல் நிலையம் இல்லாததே காரணம். அதனால்தான் தேங்காய் ,சிரட்டை விலை போகவில்லை.

**கடலூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 900 பேருக்கு விலையில்லா கறவை மாடுகள்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,01:34 IST

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 900 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டன.
கடலூர் மாவட்டத்தில் 2011-12ம் ஆண்டு 18 கிராமங்களில் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் 900 பேருக்கு பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து பயனாளிகளுக்கும் முறையே கால்நடை பராமரிப்பு குறித்த பயிற்சி வழங்குவதோடு, கால்நடைகள் வாரம் ஒரு முறை பார்வையிட்டு அவைகளுக்கு வேண்டிய அனைத்து சிகிச்சைகளும் கால்நடை துறையினரால் பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது.
ஆவின் நிறுவனத்திற்கு பால் ஊற்றும் முதல் 10 கறவை மாடுகளின் உரிமையாளர்கள் மற்றும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு குட்டிகளை ஈனும் முதல் 15 வெள்ளாடுகளின் உரிமையாளர்களை தேர்ந்தெடுத்து ஆவின் நிறுவனம் மூலம் 38 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்புள்ள தீவனத்தை வரும் 13ம் தேதி பரிசாக வழங்கப்படவுள்ளது என கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இயக்குனர் மதிவாணன் தெரிவித்துள்ளார்.
இத்தகவலை கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் கணேசன் தெரிவித்தார்.

**ரூ. 2.92 கோடிக்கு பருத்தி ஏலம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,01:44 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 11,940 பருத்தி மூட்டைகள், 2.92 கோடி ரூபாய்க்கு விற்பனையானது.
ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி, மஞ்சள் மற்றும் தானியம், எண்ணெய் வித்து பயிர்கள் கொள்முதல் செய்யப்படுகிறது.

ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், கெங்கவல்லி, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், திட்டக்குடி, பெரம்பலூர் பகுதியை சேர்ந்த, 1,270 விவசாயிகள், 11,940 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஆத்தூர், ஈரோடு, திருப்பூர், கும்பகோணம், கோவையை சேர்ந்த, 35 வியாபாரிகள் கலந்து கொண்டு, பருத்தி விலை நிர்ணயம் செய்தனர். பி.டி., ரகம் குவிண்டாலுக்கு அதிகபட்சமாக, 4,539 ரூபாயும், குறைந்தபட்சம், 4,169 ரூபாயும், டி.சி.ஹெச்., அதிகபட்சம், 5,359 ரூபாயும், குறைந்தபட்சம், 4,810 ரூபாய் என, இரண்டு கோடியே 92 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.

மு.அகரம் விவசாயிகளுக்கு விதை உளுந்து வழங்கல்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,01:47 IST

மங்கலம்பேட்டை : மங்கலம்பேட்டையில் "தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மறு பயிர் திட்டத்தின் கீழ் விதை உளுந்து வழங்கப்பட்டது.
மங்கலம்பேட்டை வட்டார துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் "தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மறு பயிர் திட்டத்தின் கீழ் விதை உளுந்து வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.
மங்களம்பேட்டை சேர்மன் பாஸ்கரன் தலைமை தாங்கி, விவசாயிகளுக்கு விதை உளுந்து மற்றும் உயிர் உரத்தை வழங்கினார். மு.அகரம் ஊராட்சித் தலைவர் புனிதவதி சஞ்சீவி, துணைத் தலைவர் கண்ணன் முன்னிலை வகித்தனர்.
அதில் மு.அகரத்தைச் சேர்ந்த 248 விவசாயிகளுக்கு தலா 8 கிலோ விதை உளுந்து மற்றும் 400 கிராம் உயிர் உரம் வழங்கப்பட்டன. துணை வேளாண்மை அலுவலர்கள் ஞான சேகரன், ரமேஷ், கலைச் செல்வி, உதவி வேளாண்மை அலுவலர் சீனிவாசன் பங்கேற்றனர்.

**விலையில்லா நெல் விதை வழங்கும் விழா**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,01:48 IST

குறிஞ்சிப்பாடி : குறிஞ்சிப்பாடி வட்டத்தில் "தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விலையில்லா நெல், உளுத்து விதைகள் சிறுதளைகள் வழங்கும் விழா அம்பலவாணன் பேட்டையில் நடந்தது.
ஊராட்சித் தலைவர் சாந்தி அண்ணாமலை வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குனர் சக்கரபாணி முன்னிலை வகித்தார், மாவட்ட "தானே' புயல் மறுவாழ்வு கண்காணிப்பு பிரிவின் கூடுதல் ஆட்சியர் வீரராகவராவ் தலைமை தாங்கி விவசாயிகளுக்கு சிறுதளைகளை வழங்கினார். இதில் 60 விவசாயிகளுக்கு சிறுதளைகள் வழங்கப்பட்டது.

குறிஞ்சிப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அப்பன்ராஜ், ரமேஷ், சிவமணி ஆகியோர் பங்கேற்றனர்.

**எதற்கெடுத்தாலும் லஞ்சம்: விவசாயிகள் குமுறல் :பணி வாரியாக கலெக்டரிடம் பட்டியல்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,02:49 IST

காஞ்சிபுரம் : "தாலுகா அலுவலகங்களில், எதற்கெடுத்தாலும் லஞ்சம் கேட்கின்றனர். இதைத் தடுக்க கலெக்டர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு கூட்டம், ஊரக வளர்ச்சி முகமை அலுவலக அரங்கில் நடந்தது. கலெக்டர் ஹனீஸ் சாப்ரா தலைமை வகித்தார். கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள், தங்கள் குறைகள் மற்றும் கருத்துக்களை தெரிவித்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் நேரு பேசியதாவது:

பாலாற்றில் தடுப்பணை கட்ட வேண்டும், என நீண்ட நாட்களாக கோரி வருகிறோம். இந்தாண்டு பட்ஜெட்டிலும், அறிவிப்பு வெளியாகவில்லை. 5 கிலோ மீட்டருக்கு ஒரு தடுப்பணை கட்ட, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து தாலுகா அலுவலகங்களிலும், பணம் கொடுக்காவிட்டால், மனு மீது நடவடிக்கை எடுப்பதில்லை. பட்டா பெயர் மாற்றத்திற்கு, 2,000 ரூபாயிலிருந்து, 10 ஆயிரம் ரூபாய் வரை கேட்கின்றனர். வருமான சான்றிதழுக்கு 5,000 ரூபாய், வாரிசு சான்றிதழுக்கு 14,000 ரூபாய், முதியோர் உதவித்தொகை பெற 5,000 ரூபாய், என கட்டணம் நிர்ணயம் செய்து வசூல் செய்கின்றனர்.

பணம் கொடுக்காவிட்டால், வேலை நடப்பதில்லை. பெண்களும் கமுக்கமாக பணம் வாங்குகின்றனர். இதைத் தடுக்க, கலெக்டர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏரியை தூர் வார நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எந்த ஏரிக்கு, எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது; ஒப்பந்ததாரர் யார், என்ற விவரத்தை வெளியிட வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள், வங்கிகளில் எவ்வித பணமும் செலுத்தாமல், கணக்கு துவக்கலாம், என அரசு அறிவித்துள்ளது. ஆனால், ஐயம்பேட்டை வங்கி உட்பட சில வங்கிகளில், 500 ரூபாய் கேட்கின்றனர். இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறு நேரு பேசினார்.

தாமல் கிராமத்தைச் சேர்ந்த அன்பழகன் பேசும்போது, "தர்பூசணி மற்றும் நிலக்கடலை விதை கிடைப்பதில்லை. அதை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

ஊத்துக்காடு கிராமத்தைச் சேர்ந்த சடகோபன் பேசும்போது, "அரசு திட்டங்கள், உடனுக்குடன் விவசாயிக்கு கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கால்நடை மருத்துவமனைகளில், காலை 8 மணிக்கு முன்பாக டாக்டர் வருவதில்லை' என்றார்.

**நெல் பயிரிட்ட விவசாயிகள் வேதனை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,03:04 IST

திருவள்ளூர் : பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து, நெல் பயிரிட்ட விவசாயிகள் மூட்டை, 700 ரூபாய்க்கு விற்கப்படுவதால், போட்ட பணத்தை எடுக்க முடியாமல் வேதனையில் உள்ளனர்.

மாவட்டத்தில் ஊத்துக்கோட்டை, பேரம்பாக்கம், பொன்னேரி உட்பட பல பகுதிகளில் விவசாயத்தை நம்பி ஏராளமான குடும்பத்தினர் உள்ளனர். இப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் நெற்பயிர் விவசாயம் செய்யப்பட்டது.

பல விவசாயிகள் அறுவடை செய்து, வாடகை லாரி மூலம், செங்குன்றம் தனியார் அரிசி ஆலைகளுக்கு கொண்டு சென்று விற்று வருகின்றனர். இதனால், அப்பகுதியில் நெல் மூட்டை ஒன்றுக்கு, 700 ரூபாய் முதல், 750 ரூபாய் வரை வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில், லாரி வாடகை மட்டும் மூட்டை ஒன்றுக்கு, 70 ரூபாய் செலவாகிறது. இச்செலவை கழித்தால் மூட்டை ஒன்றுக்கு, 600 ரூபாய்தான் விவசாயிகளுக்கு கிடைக்கிறது. இதுகுறித்து விவசாயி கண்ணன் கூறும்போது, ""ஒரு ஏக்கர் பரப்பில் நெற்பயிர் விவசாயம் செய்தால், 20 முதல், 25 மூட்டை வரைதான் நெல் உற்பத்தியாகிறது. இதன் மூலம் ஏக்கருக்கு, 14 ஆயிரம் முதல், 15 ஆயிரம் வரைமட்டுமே கிடைக்கிறது. இதில் ஏர் உழும் கூலி, உரம் செலவு, களை எடுக்க ஆட்கள் கூலி, அறுவடை இயந்திர வாடகை என, 15 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. இவ்வாறு உற்பத்தி செலவு கூட கிடைக்கவில்லை,'' என்றார்.

**வாழை கன்றின் நடுவே குலை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,03:04 IST

கும்மிடிப்பூண்டி : வாழைக் கன்றின் நடுவே தண்டை துளைத்து குலை தள்ளியதை, பொதுமக்கள் ஆர்வமாக பார்த்து சென்றனர்.

கும்மிடிப்பூண்டி அடுத்த, புதுகும்மிடிப்பூண்டி பாலீஸ்வரன் கண்டிகை பகுதியில் வசித்து வருபவர் மணி, 39. இவரது வீட்டு தோட்டத்தில் வாழை மரங்களை வளர்த்து வருகிறார். ஒரு வாழை மரத்தின் அருகே வளர்ந்து வரும் வாழைக்கன்றின் நடுவே தண்டைத் துளைத்துக்கொண்டு, சிறிய பூ ஒன்று தலை காட்டியதை மூன்று தினங்களுக்கு முன் கண்டுள்ளார்.
அந்த வாழைப்பூவில் இருந்து, தற்போது குலை தள்ளியிருப்பதை கண்டு ஆச்சர்யத்தில் அக்கம் பக்கத்தினரிடம் மணி தெரிவித்தார்.
இதையடுத்து, அந்த அதிசய வாழைக்கன்றை காண அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமானவர்கள் வந்து செல்கின்றனர்.
இது குறித்து கும்மிடிப்பூண்டி தோட்டக்கலை உதவி இயக்குனர் ராமலிங்கத்திடம் கேட்டபோது,""எப்போதாவது நன்கு வளர்ந்த வாழைமரத்தில் இம்மாதிரியான அதிசயம் நிகழும். வாழைக்கன்றின் நடுவே குலை தள்ளியிருப்பது ஆச்சரியம் கலந்த அதிசயமாகும். மரபணு மாற்றத்தால் ஏற்படும் நிகழ்வே இது," என தெரிவித்தார்.

**நெல்லை விரைவாக கொள்முதல் செய்யவேண்டும்! : நதிநீர் பாதுகாப்பு பேரவை கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,03:09 IST

ஸ்ரீவைகுண்டம் : நெல் கொள்முதல் நிலையங்களில் விரைவாக நெல்கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தூத்துக்குடி மாவட்ட நதிநீர் பாதுகாப்பு பேரவை அமைப்பாளர் நயினார் குலசேகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.
இதுகுறித்து மனுவில் கூறியுள்ளதாவது, தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி பாசனத்தில் 46 ஆயிரத்து 107 ஏக்கரில் பிசான சாகுபடியில் சுமார் 30 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி நடந்தது. தற்போது அறுவடை முடியும் தருவாயில் 30 ஆயிரம் ஏக்கருக்கு ரூ.6 லட்சம் முதல் ரூ.7 லட்சம் குவிண்டால் வரை மகசூல் கிடைத்திருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. வெளி மார்க்கெட்டில் 133 கிலோ கொண்ட கோட்டை நெல் ரூ.ஆயிரத்து 200 ரூபாயாக இருக்கும் நிலையில் அரசு கொள்முதல் நிலையத்தில் 100 கிலோ கொண்ட குவிண்டால்

நெல் ரூ.ஆயிரத்து 130 விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கோட்டை நெல்லுக்கு ரூ.400 விவசாயிகளுக்கு அதிகமாக கிடைக்கிறது.

இதனால் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை அரசு நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வருகின்றனர். தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம், சிவத்தையாபுரம், குரும்பூர், குலையன்கரிசல் ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்களை அரசு ஆரம்பித்துள்ளது. ஆனால் பெயரளவிலே செயல்படும் இந்த நிலையங்களில் தினசரி 200 குவிண்டாலுக்கு மேல் நெல் கொள்முதல் செய்யப்படுவதில்லை. நிலையங்களுக்கு விவசாயிகள் கொண்டு வந்த நெல் மூட்டைகள் ஆயிரக்கணக்கில் எடை போடாமல் வெளியே அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதனால் வெளி மார்க்கெட்டில் தங்கள் அவசர தேவைகளுக்காக நெல் மூட்டைகளை விற்று விடுகிறார்கள்.
மேலும் வெளியே அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூடைகள் பாதுகாப்பற்று உள்ளது. எனவே விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு ஆமை வேகத்தில் செயல்படும் நெல் கொள்முதல் நிலையங்களை விரைவுபடுத்தி தினசரி 1000 குவிண்டால் வரை கொள்முதல் செய்யும் அளவுக்கு வசதிகள் போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டும். செய்துங்கநல்லூர், ஆத்தூர் ஆகிய பகுதிகளில் புதிய நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் எனவும் தனது மனுவில் கூறியுள்ளார்.

**இலைக்கீற்று நோய் கையாளும் வழி**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,03:11 IST

திருவள்ளூர் : நெற்பயிரைத் தாக்கும் இலைக்கீற்று நோயை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்த வழிமுறைகளை, வேளாண் விஞ்ஞானிகள் விளக்கியுள்ளனர். மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள, "ஏ.டி.டீ., 43', "எம்.டி.யூ., 1010' போன்ற நெல் ரகங்களில் தற்போது பாக்டீரியா இலைக்கீற்று என்ற நோய் அதிகளவில் தாக்கி வருகிறது. இதனால், பயிர்கள் பாதிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.
பயிர் பாதுகாப்பு முறைகள்
இதுகுறித்து, திரூர், நெல் ஆராய்ச்சி நிலையத்தின் முனைவர்கள் மாணிக்கம், சுமதி கூறும்போது, ""இலைக்கீற்று நோய் தோன்றியுள்ள வயல்களில் இருந்து மற்ற வயல்களுக்கு, தண்ணீரைப் பாய்ச்சக் கூடாது. நோய் தாக்கிய பயிரிலிருந்து விதைகளை

சேகரிக்கக் கூடாது. மண் பரிசோதனைப் படி தழைச்சத்து உரம் இடம் வேண்டும். இந்நோயைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு கோசைட், 200 கிராம் அல்லது, 10 சதவீத சாண வடிநீர் அல்லது, 18 கிராம் காப்பர் ஆக்ஸி குளோரைடு கலந்து நோயின் தீவிரத்திற்கேற்ப ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ தெளிக்க வேண்டும். இதை முறையாக செய்தால், இலைக்கீற்று நோய் முற்றிலுமாக கட்டுப்படுத்த முடியும். இதன்மூலம், பயிரைப் பாதுகாப்பதோடு, உற்பத்தியும் அதிகரிக்கும்" என்றனர்.

**பாரம்பரிய உணவுகள் சந்தைப்படுத்துதல் கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 04,2012,03:24 IST

மதுரை : மதுரை மடீசியாவில், வாங்குவோர்-விற்போர் சந்திப்பு மற்றும் கண்காட்சியில் "பாரம்பரிய உணவுகளும் அதை சந்தைப்படுத்துதல்' தலைப்பில் கருத்தரங்கு நடந்தது. மத்திய உணவுத்துறை அமைச்சகம், சிறுதொழில் மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்தரங்கை சிப்போ பொது மேலாளர் பழனிவேல்முருகன் தொடங்கி வைத்தார். மதுரை வேளாண் பல்கலை பேராசிரியர் விஜயலட்சுமி, தஞ்சாவூர் ஐ.ஐ.சி.பி.டி., பேராசிரியர் சுலோச்சனா, மதுரை உணவு மற்றும் ஊட்டச்சத்து துறையின் தொழில்நுட்ப உதவியாளர் மாரியப்பன் ஆகியோர் பராம்பரிய உணவுகளான அவல், முறுக்கு, சீடை மற்றும் மாவுபொருட்கள் உள்ளிட்ட பொருட்களை மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தரமாக தயாரித்து, சந்தைபடுத்தி லாபம் காண்பது குறித்து பேசினர்.

தினமணி

Wednesday, April 04, 2012 3:56 PM IST

விவசாயி மர்மச் சாவு

First Published : 04 Apr 2012 10:09:34 AM IST

ஒட்டன்சத்திரம், ஏப். 3: திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அருகே உள்ள ஜ.வாடிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி டேனியல் (55). இவர் அதே ஊரில்

குத்தகைக்கு தோட்டம் போட்டு வருகிறார். இந்த நிலையில், திங்கள்கிழமை மாலை வீட்டில் இருந்து தோட்டத்துக்குச் செல்வதாக கூறிவிட்டு சைக்கிளில் சென்றவர், தோட்டத்திற்கு செல்லும் பாதையில் இறந்து கிடந்தராம்.

தனது தந்தையின் சாவில் மர்மம் இருப்பதாக கள்ளிமந்தையம் காவல் நிலையத்தில் மகன் சேகர் புகார் செய்தார்.

அதன் பேரில், போலீஸôர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**கொப்பரை விலை வீழ்ச்சியை தடுக்க வேண்டும்**

First Published : 04 Apr 2012 01:52:54 PM IST

ஈரோடு, ஏப். 3: கொப்பரை விலை வீழ்ச்சியைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு கள் இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து இயக்கத்தின் மாநில கள ஒருங்கிணைப்பாளர் செ.நல்லசாமி செவ்வாய்க்கிழமை விடுத்த அறிக்கை:

மாநில அரசின் பட்ஜெட்டில் நில வழிகாட்டி மதிப்பீடு அளவுக்கு அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக விவசாய நிலம் விவசாயத்துக்கு வாங்கப்படவில்லை. வீட்டுமனைகளாக விற்பனை செய்யப்படுவதற்கு மட்டுமே வாங்கப்படுகின்றன.

எனவே, விவசாய நிலத்தை விவசாய உபயோகத்துக்கு வாங்கும்போது முத்திரைத்தாள் கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும். பஞ்சாப் மாநிலத்தை பின்பற்றி இந்த நடைமுறையை அரசு அறிவிக்க வேண்டும்.

தென்னை சாகுபடி தடுமாற்றத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. தேங்காய் பறிக்கும் கூலி, உரிக்கும் கூலி ஆகியவை இந்த ஆண்டு 30 சதவீதம் அதிகரித்துள்ளது. தேங்காய் உரி மட்டை முன்பு ரூ.1-க்கு விற்பனை ஆனது. ஆனால், இப்போது 20 பைசாவுக்கு மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது.

ஒரு டன் தேங்காய் சிரட்டை முன்பு ரூ.9,000 ஆக விற்பனை செய்யப்பட்டது. இப்போது ரூ.4,000 ஆக குறைந்துவிட்டது. அதேபோல தேங்காய் கொப்பரை விலை ரூ.75-ல் இருந்து ரூ.41 ஆக வீழ்ச்சி அடைந்துவிட்டது.

தேங்காய் எண்ணெய்க்கு கேரளத்தில் வரிவிதிப்பில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 5 சதவீத வரி விதிப்பதால் தமிழகத்தில் இயங்கும்

எண்ணெய் உற்பத்தி ஆலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, தேங்காய் கொப்பரை விலை வீழ்ச்சியை தடுக்க மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ஏப்ரல் 6-ல் ஏலம்

First Published : 04 Apr 2012 11:30:56 AM IST

பெரம்பலூர், ஏப். 3: பெரம்பலூர் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், வெள்ளிக்கிழமை வேளாண் விளைப் பொருள்களின் விற்பனை ஏலம் நடைபெறும்

இது குறித்து மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) எம்.ஏ. சுப்ரமணியன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம், ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் விவசாயிகள் சாகுபடி செய்த பருத்தி மற்றும் மக்காச்சோளம் ஆகிய விளைப் பொருள்கள் விற்றுத்தரப்படுகிறது.

வெள்ளிக்கிழமை (ஏப். 6) அரசு விடுமுறை தினமாக இருப்பினும் விவசாயிகளின் நலன் கருதி வேளாண் விளைப் பொருள்களின் விற்பனை நடைபெற உள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை அன்று, அதிகபட்சமாக பருத்தி குவிண்டால் ஒன்று ரூ. 4,140- க்கு விற்பனையானது. அன்றைய தினம் விவசாயிகள் கொண்டு வந்த 225 மூட்டை பருத்தியானது மொத்தம் ரூ. 2 லட்சத்து 70 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.

, வாரந்தோறும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெறும் ஏலமுறை விற்பனையில் பருத்தி, மக்காச்சோளம் ஆகிய விளைப்பொருள்களை விற்பனை செய்து விவசாயிகள் பயன்பெறலாம் என்றார் அவர்.

வம்பனில் பயறு சாகுபடி பயிலரங்கு

First Published : 04 Apr 2012 11:37:32 AM IST

ஆலங்குடி, ஏப். 3: ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையத்தில் நீர் வள நிலவளத் திட்டத்தின் கீழ், பாம்பாறு உப வடிநிலப் பகுதி விவசாயிகளுக்கு உளுந்து சாகுபடி மேற்கொள்வதற்கான நவீன தொழில்நுட்பங்கள், மானாவாரி சாகுபடியில் களை நீக்கும் கருவியின் செயல்விளக்கம் சனிக்கிழமை அளிக்கப்பட்டது.

தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையத் தலைவர் சே. கீதா தலைமை வகித்தார்.

பேராசிரியர்கள் ஹரி. விஜயராகவன், த. தினகரன் ஆகியோர் விளக்கமளித்தனர்.

உளுந்துச் சாகுபடியில் களைக் கருவியின் செயல்பாடு, நன்மைகள் குறித்து இளநிலை ஆராய்ச்சியாளர் எ. செந்தில்குமார் விளக்கினார்.

முனைவர் மு. சுந்தர் வரவேற்றார். முதுநிலை ஆராய்ச்சியாளர் கு. பாரதிப்பிரியன் நன்றி கூறினார்.

நெல் கொள்முதல் நிலையங்களில் ஊழலை தடுக்க வேண்டும்

First Published : 04 Apr 2012 11:38:26 AM IST

கும்பகோணம், ஏப். 3: நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நிலவும் முறைகேடுகளைக் களைய, மாவட்ட நிர்வாகம் திடீர் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார் ரயில்வே முன்னாள் இணை அமைச்சர் வேலு.

கும்பகோணத்தில் செவ்வாய்க்கிழமை அவர் அளித்த பேட்டி:

தஞ்சை மாவட்டம் முழுவதும் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் பல முழுமையாகச் செயல்படாமல் உள்ளன. இதனால், விவசாயிகள் நூற்றுக்கணக்கான நெல் மூட்டைகளுடன் காத்திருப்பதால், நெல்லுக்குரிய பணத்தை பெற முடியாமல் அவதிப்படுகின்றனர். எனவே, இங்கு தேங்கியுள்ள நெல் மூட்டைகளை உடனடியாகக் கொள்முதல் செய்ய வேண்டும்.

மேலும், நெல்லை கொள்முதல் செய்வதற்கு மூட்டைக்கு 21 ரூபாய் வரை கையூட்டு பெறுவதாகக் குற்றச்சாட்டு உள்ளது. எனவே, ஊழலை தடுக்க மாவட்ட நிர்வாகம் திடீர் சோதனை நடத்தி சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பா.ம.க.வை பொருத்தவரை 100 சதம் மது இருக்கக் கூடாது என்ற கொள்கையில் தீவிரமாக உள்ளது. இதனால், அரசுக்கு வருவாய் பாதிக்கும் என்பதை ஏற்க இயலாது.

ரயில்வே கட்டண உயர்வால் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவர். நான் ரயில்வே இணை அமைச்சராக இருந்த போது, தமிழகத்தில் நீடாமங்கலம்- மன்னார்குடி- பட்டுக்கோட்டை பாதை, திருவண்ணாமலை- ஜோலார்பேட்டை பாதை, திண்டுக்கல்- குமுளி பாதை, அரியலூர்- தஞ்சை பாதை ஆகியவற்றை புதியதாக அமைக்க திட்டமிடப்பட்டு, அதற்கான திட்ட மதிப்பீடு ரூ. 1500 கோடி என்றும், அதில் மாநில அரசின் பங்காக ரூ. 79 கோடி வழங்க வேண்டும் எனவும் கோரப்பட்டது. அப்போதைய தமிழக அரசு அதைக் கண்டுகொள்ளாததால், தமிழகத்திற்கான அந்தத் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டன என்றார் அவர்.

பா.ம.க. மாவட்டச் செயலர் ம.க. ஸ்டாலின், மாவட்டத் தலைவர் ரவிச்சந்திரன், மாணவரணி நிர்வாகி சுதாகர் ஆகியோர் உடனிருந்தனர்.

தினகரன்

# விவசாயிகளுக்கு குறைந்த நீர் பாசனத்தில் அதிக மகசூல் பெற பயிற்சி

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-03 12:52:24

கடலூர்,: கடலூர் பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இணைந்து அண்ணாகிராமம் அடுத்த சுந்தரவாண்டியில் உலக தண்ணீர் தின விழா கொண்டாடினர். சுந்தரவாண்டி ஊராட்சி தலைவர் ஆனந்தன் தலைமை தாங்கினார். வட்டார உதவி வேளாண்மை அலுவலர் உதயபாஸ்கர் வரவேற்றார். வாளிஓடை நீர்ப்பாசன சங்க தலைவர் வேணுநாதன் முன்னிலை வகித்தார். நீர்வள ஆதாரத்துறையின் வெள்ளாறு வடிநிலப்பகுதி உதவி செயற்பொறியாளர் கலியமூர்த்தி,

உலக தண்ணீர் தின விழா கொண்டாடுவதன் நோக்கம் குறித்து விளக்கினார். வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் சார்பில் கடலூர் கோட்ட வேளாண்மை அலுவலர் சுரேஷ், குறைந்த நீர்பாசனத்தில் அதிக மகசூல் தரும் பயிர்களான மக்காச்சோளம், சிறுதானிய பயறு வகைகள், எண்ணெய் வித்து பயிரிடும் முறைகள் குறித்து விளக்கினார். மேலும் நெல் மற்றும் கரும்பு சாகுபடி தொழில் நுட்பங்களை பயன் படுத்தி தண்ணீரை சேமிக்க வேண்டிய முறைகள், நுண்ணிய நீர் பாசன முறைகள், சந்தையின் தேவைக்கேற்ப விவசாயம் மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும், சந்தை தகவல் மற்றும் சந்தை நுண்ணறிவு மூலம் விவசாயிகள் கூடுதல் லாபம் பெறும் வழிமுறைகள் குறித்தும் பேசினார். 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பண்ருட்டி வட்டார உதவி வேளாண்மை அலுவலர் திருநாகரத்தினம் நன்றி கூறினார்

## மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்க கோரிக்கை

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-04 11:49:23

ஊட்டி: தும்மனட்டி ஊராட்சி தலைவர் தேவராஜ் தமிழக முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:
கடந்த மாதம் 31ம் தேதி தும்மனட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் பெய்த வரலாறு காணாத ஆலங்கட்டி மழையினால் தேயிலை மற்றும் மலை காய்கறி பயிர்கள் சேதமடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பெருமளவு பாதிப்பிற்கும், நஷ்டத்திற்கும் உள்ளாகியுள்ளனர். மேலும் விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. பாதிக்கபட்ட விவசாயிகளுக்கு மாநில அரசும், மாவட்ட நிர்வாகமும் தலையிட்டு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியுள்ளார்.

## ஆலங்கட்டி மழையால் 500 ஏக்கர் விவசாய நிலம் பாதிப்பு

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-03 12:12:24

ஊட்டி: கடந்த இரு தினங்களுக்கு முன் ஊட்டி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் பெய்த ஆலங்கட்டி மழையால் 500 ஏக்கர் விவசாய நிலம் சேதம் அடைந்துள்ளது. சேதமடைந்த

பகுதிகளை கலெக்டர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். நீலகிரியில் கடந்த சில தினங்களாக இரவு நேரங்களில் மழை பெய்து வந்தது. குறிப்பாக குன்னூர் மற்றும் மஞ்சூர் போன்ற பகுதிகளில் கனமழை பெய்தது. ஊட்டியில் மட்டும் மழை பெய்யாமல் எந்நேரமும் வானம் மேக மூட்டத்துடன் இருந்தது. இந்நிலையில், கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஊட்டி,சுற்றுப்புற பகுதிகளில் மழை பெய்யத் துவங்கியது. மாலை 5.30 மணிக்கு மேல் ஆலங்கட்டி மழை பெய்தது. ஊட்டி, தேனாடுகம்பை, ஆலட்டி, கல்லட்டி, ஏக்குனி, தொட்டபெட்டா, பேரார், தும்மனட்டி, மோரிக்கல், கெந்தோரை, பரலட்டி, கம்பட்டி, எப்பநாடு, மதுரை வீரன் காலனி மற்றும் கக்குச்சி உட்பட 15க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 2 மணி நேரத்திற்கு மேல் 'ஐஸ்' மழை கொட்டி தீர்த்தது. சுமார் 3 அடி உயரத்திற்கு விவசாய நிலங்களில் ஐஸ் கட்டிகள் தேங்கி, காஷ்மீர் போல் காட்சியளித்தது. இதில் சுமார் 100 ஏக்கருக்கு மேல் பயிரிடப்பட்டிருந்த கேரட், முட்டைகோஸ், வெள்ளை பூண்டு, பீட்ரூட் போன்ற பயிர்கள் முற்றிலும் சேதம் அடைந்தன. அதே போல், இப்பகுதிகளில் உள்ள 500 ஏக்கருக்கும் மேற்பட்ட தேயிலை தோட்டங்களில் ஐஸ் கட்டிகள் விழுந்ததில், தேயிலை செடிகள் முற்றிமும் நாசமாகியுள்ளது. இதனால், இப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். நேற்று காலை வரை விவசாய நிலங்களில் ஐஸ்கட்டிகள் கரையாமல்

5இருந்த நிலையில், மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக், வேளாண் விற்பனை குழு தலைவர் அர்சுணன் மற்றும் தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஆல்துரை ஆகியோர் நேரில் சென்று ஆய்வு செய்தனர். பாதிக்கப்பட்டிருந்த விவசாய நிலங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கலெக்டரிடம் விவசாயிகள் பலர் மனு அளித்தனர். மேலும், பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை சீரமைக்கவும், மறு நடவிற்கு நிலங்களை தயார் செய்யவும் தோட்டக்கலைத்துறை உதவ வேண்டும். மகளிர் குழுக்கள் பெற்ற கடனை திருப்பிச் செலுத்த கால அவகாசம் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் நிருபர்களிடம் கூறியதாவது: ஆலங்கட்டி மழை பெய்ததில் 10க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களின் விவசாய நிலங்களில் ஏற்பட்டுள்ள சேதம் குறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை கொண்டு ஆய்வு நடத்தப்படும். அதன் அறிக்கை தமிழக அரசுக்கு அனுப்பப்படும் என்றார். வேளாண் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர் அர்சுணன் கூறியதாவது:

ஆலங்கட்டி மழையால் 12க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாய நிலங்கள் மற்றும் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. தேயிலை தோட்டங்கள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளன. மதுரை வீரன் காலனி பகுதியில் வீடுகள் சேதம் அடைந்துள்ள நிலையில், அவர்கள் சமுதாய கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிவாரண பொருட்கள் மற்றும் உணவு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. சேதமதிப்பீடுகள் குறித்து தோட்டக்கலைத்துறையினர் ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். தமிழக முதல்வரை நேரில் சந்தித்து இழப்பீடுகள் குறித்து தெரிவிப்பதோடு,பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தப்படும் என்றார்.

பசுந்தேயிலை பறிக்க 6 மாத காலமாகும்

கடந்த சனிக்கிழமை பெய்த ஆலங்கட்டி மழையால் கெந்தோரை, தும்மனட்டி, கப்பச்சி உட்பட 12க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள 500 ஏக்கருக்கும் மேற்பபட்ட தேயிலை தோட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது இப்பகுதிகளில் உள்ள தேயிலை செடிகளில் இருந்த பசுந்தேயிலை அனைத்தும் உதிர்ந்து வெறும் குச்சிகள் மட்டுமே உள்ளது. இச்செடிகளில் மீண்டும் பசுந்தேயிலை வளர இன்னும் 6 மாதங்கள் ஆகும் என கூறப்படுகிறது. இதனால், இனிவரும் 6 மாதங்கள் விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்களின் வாழ்வதாராம் பாதிக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

## பட்டு விவசாயிகளுக்கு தரமற்ற பொருட்கள் விநியோகம்

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-03 12:37:44

திருப்பூர்: திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் கலெக்டர் மதிவாணனிடம் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை வழங்கினர்.

தாராபுரம் பெரிய குமாரபாளையத்தைச் சேர்ந்த ரகுநாதன் அளித்த புகார் மனுவில் கூறி இருப்பதாவது:

திருப்பூர் மாவட்டத்தில் 100க்கு மேற்பட்ட விவசாயிகள் பட்டு விவசாயம் செய்கிறோம். பெரிய குமாரபாளையம் பகுதியில் பட்டு விவசாயம் செய்யும் எங்களுக்கு கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பொருட்கள் தரமற்றவையாக உள்ளன. இது குறித்து தமிழக முதல்வரின் தனிப்பிரிவிற்கு கடந்த செப்டம்பர் மாதம் கடிதம் அனுப்பட்டது. ஆனால் பட்டு வளர்ச்சித் துறை சார்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிரியா ஊக்கித் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட நிறுவனம்

விலை ஆகியவற்றை தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் பெறப்பட்டு பொருட்களின் தரம் ஒப்பிடும் போது அட்டைப்பெட்டியில் உள்ள விலைக்கும் மிகுந்த வித்தியாசம் உள்ளது. மேலும் சரியான முகவரி கிடையாது. நிறுவனத்தின் பெயருக்கும் பொருளுக்கும் சம்பந்தமில்லை.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பெறப்பட்ட தகவல் படி ஒவ்வொரு விவசாயிக்கும் ஒன்பது பொருள் கொடுக்கப்பட்டுள்ளதாக தகவல் அளுத்துள்ளனர்., ஆனால் விவசாயிகளுக்கு ஹீட்டர் உள்ளிட்ட 7 பொருட்கள் மட்டுமே வழங்கப்பட்டன. இதில் ஹீட்டர் (வெப்ப உருவாக்கி) எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் ஐஎஸ்ஐ., முத்திரையும் இல்லாமல் தரமற்றதாக உள்ளது.

மீதி பொருட்கள் வழங்கப்படவில்லை. எனவே இந்த பயனில்லாத தரமில்லாத பொருட்கள் குறித்து உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். இது குறித்து பட்டு வளர்ச்சித் துறை அதிகாரிகளை நேரிலும் தொலைபேசி மூலம் புகார் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

## தேனீ வளர்ப்பு பயிற்சி

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-04 10:30:38

கோவை,: கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட அறிக்கை: கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வரும் 9ம் தேதி தேனீ வளர்ப்பு குறித்து ஒருநாள் பயிற்சி வழங்கப்படுகிறது.

இதில் தேனீ கூட்டங்களை கண்டுபிடித்து வளர்க்கும் முறை, தேனீ கூட்டங்களை சேர்த்து வளர்க்கும் முறை, ராணி தேனீ உற்பத்தி முறை, இயற்கை எதிரிகள், நிர்வாகம் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை அளிக்கப்படும் இப்பயிற்சியில் கலந்து கொள்ள ரூ.150 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் விபரங்களுக்கு, தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை, 0422-6611241 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாத்து வளர்ப்பு பயிற்சி முகாம்

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-04 11:53:43

நாமக்கல்: வாத்து வளர்ப்பு பயிற்சியில் பங்கேற்க பெயர் பதிவு செய்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 10ம் தேதி(செவ்வாய்) இறைச்சி வாத்து வளர்ப்பு என்ற தலைப்பில் இலவச பயிற்சி நடக்கிறது. இம்முகாமில் உயர்ரக முட்டையிடும் வாத்து இனங்கள், இறைச்சி வாத்து இனங்கள், வாத்துக்களின் மேலாண்மை, வாத்து குழல் அமைப்பு, உணவிடுதல் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.
இதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், கிராமப்புற பெண்கள் கலந்து கொள்ளலாம். எனவே விருப்பம் உள்ளவர்கள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்து பெயரை முன்பதிவு செய்து கொள்ளுமாறு திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## பரமத்திவேலூரில் நாளை தேங்காய் பருப்பு ஏலம் ரத்து

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-04 11:53:18

நாமக்கல்: பரமத்தி வேலூர் உழவர் சந்தையில் நாளை (5ம் தேதி) தேங்காய் பருப்பு ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் உழவர் சந்தையில் நாளை(5ம் தேதி) நடைபெற இருந்த தேங்காய் பருப்பு ஏலம் அரசு விடுமுறை என்பதால் நடைபெறாது. மகாவீர் ஜெயந்தியையொட்டி ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளது.
அடுத்த வியாழக்கிழமை முதல் வழக்கம்போல் ஏலம் நடைபெறும். இனிவரும் காலங்களில் அரசு விடுமுறை தினமாக இருந்தால் அன்றைய தினம் தேங்காய் பருப்பு ஏலம் நடைபெறாது என சேலம் விற்பனைக்குழு செயலாளர் அண்ணாதுரை தெரிவித்துள்ளார்.

## கோழிகளில் தீவன எடுப்பு குறைந்தாலும் முட்டை உற்பத்தியில் பாதிப்பு இருக்காது வானிலை மையம் தகவல்

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-04 11:52:55

நாமக்கல்: கோழிகளில் தீவன எடுப்பு குறைந்தாலும், முட்டை உற்பத்தி பாதிக்காது என நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வரும் 3 நாட்களுக்கான வானிலை அறிக்கையில் கூறியிருப்பதாவது: நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதியில் வரும் 3 நாட்களும் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்று மணிக்கு 4 கி.மீ. வேகத்தில் மேற்கில் இருந்து வீசும். வெப்பநிலை அதிகபட்சம் 100 டிகிரி. குறைந்தபட்சம் 75 டிகிரி. காற்றின் ஈரப்பதம் அதிக அளவு 76 சதவீதம். குறைந்த அளவு 54 சதவீதமாக காணப்படும். மேகமூட்டமும், காற்றின் வேகமும் பகலின் வெப்பத்தை அதிக நேரத்துக்கு உயர்ந்த அளவில் நீடிக்க விடாது. இதனால், வெப்பத்தினால் ஏற்படும் அதிர்ச்சி கோழிகளிடையே உயர்மனைகளால் குறைவாக காணப்படும் வாய்ப்பு உள்ளது. காற்றின் வேகத்தினால் கோழிகள் வெப்பத்துக்கு பழகிக் கொள்ள ஏதுவாகும். தீவனத்தில் சிறிய அளவில் எண்ணெய் சேர்த்து வருவது தீவன எடுப்பு குறைந்தாலும், முட்டை உற்பத்தியில் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது. கோடை சாகுபடிக்கு ஆமணக்கு ஏற்ற பயிர். சித்திரை பட்டத்தில் ஒய்ஆர்டிஎச்-1 என்ற ரகத்தை தேர்வு செய்து, ஒரு மழைக்கு பின் பயிரிடலாம். கிலோ ஞ்35 என்ற அளவில் சீராக விற்பனையாவதால் ஆமணக்கு பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட வேண்டும்.

மீண்டும் நாட்டுக்கோழிகளில் ராணிக்கெட் நோய் தென்பட ஆரம்பித்துள்ளது. அதிக வெயிலும் லேசான கோடை மழையும் இந்த நோய்க்கான எதிர்ப்பு திறனை குறைத்து விடும். எனவே, நாட்டுக்கோழி வளர்ப்பவர்கள் குஞ்சுகளுக்கு 8 வாரம் வரை கண், நாசியில் சொட்டாகவும், வயதான கோழிகளுக்கு இறக்கைப்பட்டையில் ஊசியாகவும் தடுப்பு மருந்தை பயன்படுத்தி இந்த நோயில் இருந்து காப்பாற்றவேண்டும். இவ்வாறு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 6 ஆயிரம் கிலோ இருப்பில் உள்ளது விவசாயிகளுக்கு மானிய விலையில் பாசிப்பயறு விதை விநியோகம் கோடை சாகுபடிக்கு அழைப்பு

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-04 11:52:25

ராசிபுரம்: ராசிபுரம் மற்றும் சுற்று வட்டார பகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் பாசிப்பயறு விதை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இது குறித்து ராசிபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
ராசிபுரம் பகுதியில் சித்திரை பட்ட விதைப்புக்கு தேவையான பாசிப்பயறு விதைகள்

வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விதை கிராம திட்டத்தின் கீழ், மானிய விலையில் பாசிப்பயறு விதை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கோடை மழையை பயன்படுத்தி விவசாயிகள் தங்களது வயல்களில் பாசிப்பயறு சாகுபடி செய்யலாம். இந்த வாய்ப்பினை பயன்படுத்தி ராசிபுரம், குருக்கபுரம், பிள்ளாநல்லூர், 85,ஆர்.குமாரபாளையம், ஆயிபாளையம், எல்லபாளையம், கோப்பம்பட்டி, பொன்குறிச்சி, சந்திரசேகரபுரம், அணைபாளையம், கூனவேலம்பட்டி, சிங்களாந்தபுரம், போடிநாய்க் கன்பட்டி, மோளப்பாளையம், ஆண்டகளூர்கேட், முத்துகாளிப்பட்டி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மானிய விலையில் பாசிப்பயறு விதைகளை பெற வேண்டும்.
இவ்வாறு வேளா ண்மை உதவி இயக்குனர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

## வரத்து அதிகரிப்பால் வெங்காயம் விலை மலிவு

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-02 12:46:30

மதுரை: வரத்து அதிகரிப்பால், சின்னவெங்காயம் மற்றும் பல்லாரி விலை மலிவாக விற்கப்படுகிறது.
மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் காய்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்: (கிலோ- ரூபாய் மதிப்பில்):
நாட்டு தக்காளி- 18, கத்தரிக்காய்- 15, வெண்டைக்காய்- 17, பல்லாரி- 10, சின்னவெங்காயம்- 10, உருளை- 15, கருணை- 15, சேனை- 15, சேப்பங்கிழங்கு- 25, காரட்- 16, பீட்ரூட்- 18, பட்டர்பீன்ஸ்- 60, சோயாபீன்ஸ்- 50, பச்சை பட்டாணி- 40, முருங்கை பீன்ஸ்- 40, நூக்கல்- 20, டர்னிப்- 20, முள் ளங்கி -15, அவரை- 30, மிள காய்- 16, சுரைக்காய்- 10, சவ்சவ்- 20, சீனி அவரைக்காய்- 15, வெள்ளைபூசணி -7, கருவேப்பிலை- 9, கொத்தமல்லி- 15, புதினா- 10, காலிப்ளவர்- 12, பீர்க்கங்காய்- 20, முட்டைக்கோஸ்- 25, புடலங்காய்- 18, சின்னபாகற்காய்- 40, பெரிய பாகற்காய்- 15, இஞ்சி- 20, கீரை வகைகள்- 15 என விற்கப்படுகிறது.
மொத்த வியாபாரி சேதுபதி கூறுகையில், ‘வெங்காயம் வரத்து அதிகரிப்பால், கிலோ ரூ.10க்கு கிடைக்கிறது. மற்ற காய்கறிகளின் விலையும் சீராக உள்ளது. ஜூன் மாதம் வரை காய்கறி வரத்து அதிகரிக்கும். விலையும் சீராக இருக்கும்,’’ என்றார்.

## மல்லிகை விலை சரிவு

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-02 12:46:11

மதுரை: மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டில் மல்லிகை வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ.70க்கு விற்கப்படுகிறது.
மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டிற்கு மதுரையை சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து பூக்கள் வருகிறது. தற்போது மல்லிகை வரத்து அதிகரித்துள்ளதால் கிலோ ரூ.70க்கு விற்பனை செய்யப்படுகிறது. நேற்றைய விலை நிலவரம்:(கிலோ, ரூபாய் மதிப்பில்): மல்லிகை-70, முல்லை-100, சம்மங்கி-60, ரோஸ்-60, தாமரை-3, அரளி-80 என விற்கப்படுகிறது.
மாட்டுத்தாவணி பூ வியாபாரிகள் சங்கத்தலைவர் மனோகரன் கூறுகையில் 'மல்லிகை வரத்து அதிகரிப்பால் கிலோ ரூ.70க்கு விற்கப்படுகிறது. ஜூன் வரை மல்லிகை விலை மலிவாக இருக்கும்,''என்றார்.

## கறவை மாடு வளர்ப்பு பயிற்சி

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-03 11:41:22

நாகை: நாகை மாவட் டம் சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் 3ம் தேதி (இன்று) காலை 10 மணியளவில் கறவை மாடு வளர்ப்பும், முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.
இதில், ஆர்வமுள்ள விவசாயிகள், பண்ணை மகளிர், இளைஞர்கள், சுயதொழில் முனைவோர், சுய உதவிக்குழு உறுப்பினர் அனைவரும் திரளாக கலந்துகொண்டு பயன்பெறவேண்டும். இத்தகவலை சிக்கல் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் பேராசிரியர் முனைவர் ராஜேந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## தொடர் மின்வெட்டு காரணமாக குறைந்துவரும் பருத்தி சாகுபடி விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பு

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-04 12:15:33

கும்பகோணம்: தொடர் மின்வெட்டு கார ணமாக கும்பகோணம் பகுதியில் நடப்பாண்டு பருத்தி சாகுபடி பெருமளவு குறைந்தது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் பொரு ளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

காவிரி டெல்டாவில் நெல்லுக்கு மாற்று பயிராக பருத்தி பெருமளவு சாகுபடி செய்து வருகின்றனர். சம்பா சாகுபடி முடிந்ததும் வய லில் இருக்கும் ஈரப்பதத் தை கொண்டும், மின் மோட் டார் மூலமும் மாசி பட்டத் தில் (பிப்ரவரி, மார்ச் மாதங்களில்) பருத்தி விதை களை ஊன்றி, பட்டம் பிரி த்து, களையெடுத்து, மே, ஜூன் மாதங்களில் பஞ்சு கள் வெடித்து, அதனை பறி த்து விவசாயிகள் விற் பது வழக் கம்.

பிப்ரவரி மாதத்தில் பருத்தி விதை ஊன்றினால், மேட்டூர் அணையிலிருந்து ஜூன் மாதம் தண்ணீர் வருவதற்குள் பருத்தி செடியிலிருந்து பஞ்சுகள் வெடித்துவிடும். பஞ்சுகளுக்கு நல்ல விலை கிடைக்கும் என்ப தால், டெல்டா மாவட்ட விவசாயிகள் பருத்தி சாகுபடியில் ஆர்வம் காட்டி வந் தனர். மகசூல் கண்ட பருத்தி பஞ்சுகளை மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற் பனை கூடங்களிலும், தனி யார் பருத்தி வியாபாரிகளி டம் குவிண்டால் ரூ.2,500 க்கு சராசரியாக கடந்த ஆண்டு விற்பனை செய்து வந்தனர். கடந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 350 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இதில் அதிகமாக பாபநாசம் மற்றும் திருவிடைமருதூர் பகுதியில்தான் அதிகமாக பருத்தி சாகுபடி நடைபெற் றது. பருத்தி செடிகளுக்கு வாரம் ஒரு முறையாவது தண்ணீர் பாய்ச்ச வேண் டும். அப்போதுதான் தற் போது அடிக்கும் வெயி லுக்கு செடிகள் தாங்கும். தற்போது மின்சார தட்டுப்பாட்டால் பருத்தி செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. இதனால் சாகுபடி பரப்பளவு பாதி யாக குறைந்து விட்டது.

இதுகுறித்து பாபநாசம் அடுத்த பெருமாங்குடி விவசாயி பானுமதி கூறுகை யில், கடந்த ஆண்டு இரண்டு ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்திருந்தோம். இப்போது மின்வெட்டு பிரச்னையால் ஒரு ஏக்கரில் மட்டுமே சாகு படி செய்யப்பட்டுள்ளது. மேலும், எங்கள் பகுதியில் ஆயில் மோட்டார் மூலம் பருத்தி யை ஊன்றியவர்கள் டீசல் போட்டு கட்டுப்படியாகவில்லை என புலம்புகின்றனர். கூட்டி கழித்து பார்த்தால் நட்டம் தான் வரும். இதையும் விட்டால் வேறு வழியல்லாத காரணத்தால் பருத்தியை கொஞ்சமாவது சாகுபடி செய்கி றோம் என் றார்.

தனியார் பருத்தி விதை விற்பனை பிரதிநிதி ஒருவர் கூறுகையில், சில ஆண்டுகளாக கும்பகோணம் பகுதி யில் மட்டும் ஆண்டுதோறும் சராசரியாக 60 டன் விதை கள் விற்பனை செய்யப்பட் டது. இந்த ஆண்டு இதுவரை 10 டன் விதை கூட விற்பனை செய்ய முடியவில்லை. கடந்த ஆண்டு பயிரிட்டவர்களில் பாதி பேர் விவசாயம் செய்யவில்லை. இது விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் விவசாய கூலித்தொழிலாளர்களுக் கும் பெரும் பொரு ளாதார இழப்பு என்றார்.

# கடைமடைப் பகுதியில் ஆழ்குழாய் கிணறுகளில் குறைந்து வரும் நீர்மட்டம் விவசாயிகள் கவலை

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-04 12:13:31

சேதுபாவாசத்திரம்: சேதுபாவாசத்திரம் கடை மடை பகுதிகளில் ஆழ் குழாய் கிணறுகளில் வெகு வாக நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதிகளில் மூன்றில் இரண்டு பங்கு நிலங்களில் தென்னை சாகு படி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் அக்டோபர், நவம்பர் மாதங்களில் தென்னைகளுக்கு உரம் வைப்பார்கள். இதன் தாக்கம் குறைய ஆழ்குழாய் கிண றுகள் மூலம் தண்ணீர் பாய் ச்ச வேண்டும். ஆனால், தற் போது 3 மணி நேரம் மட் டுமே மும்முனை மின் சா ரம் வழங்கப்படுகிறது. இத னால் ஒரு நாளைக்கு 10 தென்னை மரங்களுக்குகூட தண்ணீர் பாய்ச்ச முடியா மல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.
அதேசமயம் கடந்த ஆண்டு கடைமடை பகுதிகளில் பருவமழை மிகக்குறைவாகவே பெய்திருந்த தால் தற்போதே கோடை யின் தாக்கம் அதிகரித்து வருகிறது. வெயிலின் தாக் கம் அதிகம் இருப்பதால் ஏரி, குளங்களிலும் தண்ணீர் வெகுவாக குறைந்துவிட் டது. தென்னை மரம் மட்டுமின்றி பரவலாக கோடை சாகுபடியான நிலக்கடலை, உளுந்து, மக்காச்சோளம் போன்ற பயிர்களும் தண் ணீர் இன்றி வாடி வருகிறது.
பருவமழை குறைவால் ஏப்ரல் மாதங்களில் 30 அடி யில் ஆழ்குழாய் கிணறுக ளில் நீர்மட்டம் இருக்க வேண்டிய நேரத்தில் தற் போது 70 அடிக்கு கீழ்தான் தண்ணீர் கிடைக்கிறது. நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதால் வறட்சியின் தாக்கம் அதிகமாக உள் ளது.
இதேநிலை நீடித்தால் தென்னை மரங்கள் முழுவ தும் பட்டுப்போய்விடுவது டன் கோடையில் சாகுபடி செய்துள்ள பயறுவகைக ளும் விவசாயிகளுக்கு பலன் தராமல் போய்விடும் சூழ் நிலை உருவாகியுள்ளது.
பரவலாக பல்வேறு பகுதிகளில் பெய்துவரும் மழை கடைமடை பகுதிகளில் பெய்தால் மட்டுமே தென் னையை காப்பாற்ற முடியும் என விவசாயிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

# விவசாயிகள் சங்க கூட்டம்

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-04-02 12:56:36

மானாமதுரை: மானாமதுரையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் மின்கட்டண உயர் வை கண்டித்து பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு விவசாயிகள் சங்க ஒன்றிய செய லாளர் வீரபாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் மாணிக்கம் முன்னிலை வகித்தார். விவசாயிகள் சங்க தேசிய தலைவர் வரதராஜன் பேசுகையில், “மத்திய, மாநில அரசுகள் போட்டி போட்டுக் கொண்டு விவசாயிகளை வஞ்சித்து வருகின்றன. பெரும்பாலான விவசாயம் டீசல் மற்றும் மின்சாரத்தை நம்பியே செயல்பட்டு வருகிறது. ஆற்றுப்பாசனம் பல இடங்களில் கைவிட்டு விட்டது. ஆற்றுப்படுகைகள் எல்லாம் பாலைவனமாகி விட்டன. இந்நிலை யில் அரசுகள் விவசாயிகளை கைவிட்டுவிட்டது. மின்கட்டண உயர்வால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அரசு மின்கட்டண உயர்வை பரிசீலிக்க வேண் டும்“ என்றார். கூட்டத்தில் மாவட்ட தலைவர் ஆதி, மாநில துணை பொதுச்செயலாளர் சண்முகம், முகமது அலி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.